**கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஈஎஸ்டீபீ) - 2013**

கல்வித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஓகஸ்த்து 19 ஆம் திகதிய 3008 – எஸ்ஆர்ஜ சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ விசேட செயற்பாடுகள் ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் iv ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின்படி, மாகாண மட்டத்தில் நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள் கல்வி அமைச்சு (எம்ஓஈ) மற்றும் சகல மாகாண சபைகள் என்பவற்றால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கை கல்வி அமைச்சு மற்றும் சகல மாகாண சபைகள் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின்படி, நாட்டின் பொது கல்வித்துறை எதிர் நோக்கும் சவால்களை முன்னோக்கிய 2013 – 2017 (எஸ்டிஎவ்பீ) கல்வித்துறை அபிவிருத்தி சட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அமுலாக்குவதற்கான நிதி ஆதரவை வழங்குவதற்காக ஈஎஸ்டீபீ அமுலாக்கப்படுகிறது. ஈஎஸ்டீபீயின் அமுலாக்கும் முகவர் கல்வி அமைச்சாகும். ஈஎஸ்டிஎவ்பீ இன் படி ஆண் மற்றும் பெண் இரண்டாம் நிலை பாடசாலை பட்டதாரிகளின் வேலை வாய்ப்பை முன்னேற்றுவதற்கான நவீனத்துவ

இரண்டாம் நிலைக் கல்வி பாடசாலை முறைமையை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் படி, நிகழ்ச்சி திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 ஓகஸ்த்து 19 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 ஓகஸ்த்து 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த கல்வி அமைச்சு (எம்ஓஈ) பரீட்சைத் திணைக்களம் (டிஓஈ) மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (டிஓஈபீ) என்பவற்றின் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் ஒருங்கிணைக்கும் நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகளைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான நிதிப்பிரமாணம் மற்றும் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றுநிருபங்களை தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கை தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கை மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கை தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கை தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான கல்வி செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க கடனின் கீழான பற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகப் கல்வித் துறையின் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் நிதிப் பிரமாணம் (எவ்ஆர்) 150 ஆம் மற்றும் பொதுத் திறைசேரியின் 2013 திசெம்பர் 06 ஆம் திகதிய 233/2013 ஆம் இலக்க அரச கணக்கின் சுற்று நிருபங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் ஏடீபீ ஆல் ஏற்றுக்கொண்டிருந்தாக கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) வைப்புக் கணக்குகளிற்கான ஆரம்ப வைப்பு அதிலிருந்தான பற்றுல்கள் மற்றம் மீள்நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தரப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளபடியான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டு மீதி பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டது என்பதுடன்

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

------------------------

எனது சிறந்த பரிசோதனைகளுக்கும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் இணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2013 திசெம்பர் 06 ஆம் திகதிய 233/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்று நிருபம் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேற்படி ஒதுக்கீட்டுக் கணக்குகள் திறைசேரி கணணி அச்சுத் தாள்கள் ஆண்டுப் பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் ஒன்பது மாகாண சபைகளால் பேணப்பட்ட ஏடுகள், பதிவேடுகள் மற்றும் கணக்குகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன என்றும்,

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கபட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமனவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தால் வழங்கப்பட்ட தகவல்களின்படி, சகல மூலங்களிலிருந்தும் கல்வித்துறைக்காக மீளாய்வாண்டில் ரூபா 84,592,467,000 கூட்டு மொத்த தொகையான செலவினம் செய்யப்பட்டது. சகல ஒன்பது மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களின் 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் சமர்ப்பிக்கப்பட்டவாறு சகல நிதி மூலங்களிலிருந்தும் செய்யப்பட்ட செலவினத்தின் பொழிப்பை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| விபரம் | மீளாய்வாண்டில் சகல மூலங்களிலிருந்தும் செய்யப்பட்ட செலவினம் |
|---|---|
| | ரூபா |
| மீண்டுவரும் செலவினம் | |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 80,358,783,000 |
| மூலதனச் செலவினம் | 4,233,684,000 |
| | 84,592,467,000 |

### 4.2 வைப்புக் கணக்கு

தரப்பட்ட தகவல்களின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மாகாண மற்றும் மத்திய மட்டங்களிற்காக இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட 4201 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் மீளாய்வாண்டின் போதான செயற்பாடுகள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| ஆரம்ப வைப்பு | இல்லை | இல்லை |
| கூட்டு: மீள் நிரம்பல்கள் | 40,184,328 | 5,308,209,189 |
| கழி: பற்றுதல்கள் | 40,184,328 | 5,308,209,189 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | --- | ---- |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவின் படி நிதிக் கூற்றுக்களானவை ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட வேண்டும் என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல நிதி மூலங்களிலிருந்தும் அனைத்து ஒன்பது மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 84,592,467,000 கூட்டு மொத்தத் தொகையான மொத்தச் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்ட ஆண்டு நிதி அறிக்கைகள் மற்றும் கணக்காய்விற்குத் கிடைத்த தகவல்களின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மத்திய மற்றும் மாகாண மட்டங்களிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்த ஐ.அ.டொலர் 40 மில்லியன் கடனின் மொத்த பெறுகைகளில் நிகழ்ச்சித்திட்டத்தின் மாகாண மட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு புறம்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அனைத்து ஒன்பது மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுச்களிற்காக ஆண்டு மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்ட கடன் பெறுகைகளின் பயன்பாட்டிற்கான ஒதுக்கீடு புறம்பாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சகல நிதி மூலங்களிலிருந்தான ரூபா 89,132,217,000 கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் ஒன்பது மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களின் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினத்தை ஈடுசெய்வதற்கு ஆண்டு மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்படிருந்தெனவென்று அவதானிக்கப்பட்டது. அவற்றில், மொத்த ஒதுக்கீட்டில் 5 சதவீதம் தொடக்கம் 16 சதவீத வரையானவீச்செல்லையில் மேல், வடமேல் மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களின் மாகாண கல்வி அமைச்சுக்களினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,284,549,000 கூட்டு மொத்தத் தொகையான ஒதுக்கீடுகளில் சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

### 5.3 பௌதீக முன்னேற்றம்

இந்த அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல மூலங்களின் நிதிகளிலிருந்தும் கல்வித்துறைக்காக மாகாண சபைகளினால் செய்யப்பட்ட ரூபா 84,592,407,000 கூட்டு மொத்தத் தொகையான மொத்த செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மாகாணக் கல்வித் திணைக்களங்களின் செயற்பாடுகள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்களில் சில பின்வருமாறு மீளத் தரப்படுகின்றன.

(i) மாகாண மட்டத்தில் பாடசாலைகளிற்கான ஆசிரியர்களின் ஒதுக்கீடு திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பல மாகாணங்களின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கிய அதே நேரம் சம்பந்தப்பட்ட மாகாணங்களின் நகரப் புறப்பாடசாலைகள் அனுமதிக்கப்பட்ட ஆளணியிலும் பார்க்க மேலதிக ஆசிரியர்களை கொண்டிருந்தன என்று அறிக்கையிடப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, சப்ரகமுவ, ஊவா மேல், தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராமப் புற பாடசாலைகளில் பிரதான பாடங்களிற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்த அதே சமயம் ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் முறையாக அமுலாக்கப்படாமையால் சம்பந்தப்பட்ட மாகாணங்களிலுள்ள நகரப்புற பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் இருந்தனர்.

(ii) சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, பல மாகணங்களிலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் மாணவர் தொகை குறைந்த மட்டத்திலிருந்தது தென் மாகாணத்தில் 827 இரண்டாம் நிலை பாடசாலைகள் 500 மாணவர்களிற்கு குறைவாகக் கொண்டிருந்த அதே சமயம் மத்திய மாகாணத்தில் 397 ஆரம்ப நிலைப் பாடசாலைகள் 100 இற்கும் குறைந்த மாணவர் தொகையைக் கொண்டிருந்தனர். 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென்மாகாணத்தில் மீளாய்வாண்டில் மூடப்பட்ட 02 பாடசாலைகள் உள்ளடங்கலாக 138 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலிருந்தன என்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

(iii) மத்திய மாகாணத்தில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் விகிதம் 6.82 சதவீதமாக இருந்த அதே சமயம் ஏனைய மாகாணங்களில் மாணவர் சித்தியடையும் வீதம் 9.5 சதவீதம் தொடக்கம் 11.5 சதவீதம் வரை வீச்செல்லை கொண்டதாக இருந்தன. மேல், சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மாகாணங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதரணதர) பரீட்சையில் சகல பாடங்களிலும் தோல்வியடையும் வீதம் 4 சதவீதம் தொடக்கம் 8 சதவீதம் வரையான உயர் வீச்சில் இருந்தன. மேலும், வட மேல், தென், மத்திய, வடமத்திய மற்றும் மேல் மாகாணங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சகல பாடங்களிலும் தோல்வியடையும் வீதம் 10 சதவீதம் தொடக்கம் 16 சதவீதம் வரையான வீச்செல்லையில் உயர்வானதாக இருந்தது.

(iv) ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களின் மாகாண கல்வித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் ஆண்டு நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் செயலாற்றல் மீளாய்வு அறிக்கைகள் என்பன இன்மையால் கணக்காய்வில் நம்பகமான விதத்தில் மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாண சபையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு இயங்கியிருக்கவில்லை என்று அறிக்கையிடப்பட்டிருந்தது. கிழக்கு மற்றும் வடமத்திய மாகாண சபைகளில் சம்பந்தப்பட்ட மாகாண கல்வி அமைச்சுக்களின் செயலாற்றலை மீளாய்வு செய்யக் கூடிய வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(v) தென் வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மாகாண கல்வித் திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டில் சொத்துக்களின் பௌதீகரீதியான உள்ள தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆண்டு கணிப்புச் சபைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) மேல், கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் மாகாணக் கல்வித் திணைக்களங்களிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள், கணணிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள், ஆசிரியர் விடுதிகள் முதலிய சொத்துக்கள் காணாமற் போயிருந்தோ அல்லது குறைபாட்டிடனோ இருந்த சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

(vii) சப்பிரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் செயலாற்றல் கணக்காய்வில் ஆதார ஆவணங்களின்றி அல்லது முறையான அதிகாரமின்றி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமை. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை, நீண்ட காலமாக முற்பணங்கள் தீர்க்கப்படாதிருந்தமை போன்ற மாகாண மட்டப் பாடசாலைகளில் நிதிக் கட்டுப்பாடுகளில் நலிவுகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. மேலும், மேல், கிழக்கு, சப்பிரகமுவ, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் மாகாண கல்வித் திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பாடசாலைகளின் பொது நிருவாகம் ஆசிரியர்களின் விடுமுறை மற்றும் தர உள்ளீடுகளிற்கான பதிவேடுகளின் பேணுகை, மாணவர் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க மானியங்களின் பங்கீடு, மற்றும் ஆசிரியர்களின் இடர் நிவாரணம் மற்றும் ஏனைய கடன்கள் வீட்டு வாடகைகள் என்பவற்றின் அறவீடு முதலியன அவதானிக்கப்பட்டன.